**சிலாபம் நகர சபை - 2024**

---------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலாபம் நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) **181(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன்** சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சிலாபம் நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சிலாபம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 04 நடைமுறையல்லாச் சொத்துக்களின் கிரயம் ரூபா 113,592 மற்றும் கிரயம் குறிப்பிடப்படாத மேலும் 06 நடைமுறையல்லாச் சொத்துக்கள் உரிய சொத்துக் கணக்குளிலிருந்தும், மூலதன வருமான பங்களிப்பு கணக்கிலிருந்தும் அகற்றப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்களின் அகற்றுதல் தொடர்பான தகவல்கள் இறுதிக் கணக்குகளுக்காக கிடைக்கா திருந்தமையால் கணக்கு வைப்பதற்கு முடியாதிருந்ததுடன் 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 02 கிரிக்கெட் புள்ளியிடல் பதாதைகளின் பெறுமதி ரூபா 113,000 நடைமுறையல்லாச் சொத்தாக கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைத்த கிரிக்கெட் புள்ளியிடல் பதாதையின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் நாட்குறிப்புக்கள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் தொலைந்து போயிருந்த 2120 நூலகப் புத்தகங்களின் பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குளில் நாட்குறிப்புக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொலைந்து போன புத்தகங்கள் தொடர்பாக விசாரணைகள் நடாத்தி கணக்குகளில் சீராக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2025 ஆம் ஆண்டில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 822,368 கடன் தவணைப் பணம் நடை முறைப் பொறுப்பாக காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் அது நடைமுறையல்லாப் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் நடைமுறைப் பொறுப்பாக காண்பித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக பொறுப்புக்கள் வகைப்படுத்தப்பட்டு கணக்கு வைத்தல் வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 116,353,389 ஆகவும், பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 104,108,378 ஆகவும் இருந்தமையால் இந்த இரண்டு மீதிகளுக்குமிடையே ரூபா 12,245,011 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் நாட்குறிப்புக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பரீட்சித்து சரியாக கணக்குகளில் சீராக்குதல் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 8,871,877 பெறுமதியான முற்கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்காக முற்கொடுப்பனவு ஆவணங்கள் மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்காமையின் காரணமாக திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | ரூபா 8,871,877 தொகை நீண்ட காலம் முதல் தீர்க்கப்படாத கணக்கீடு வழுவாகும். இதனைத் தீர்த்துவைப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அங்கீகாரத்தின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 571(2) | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 554,393 பெறுமதியான பொது வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1975 இன் உள்ளூராட்சி சேவை ஓய்வூதியக் கட்டளை | | | |

| | | | |
|---|---|---|---|
| மற்றும் 1978 யூன் 07 ஆம் திகதிய இலக்கம் 320/8 என்ற அரசாங்கத்தின் அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திருத்தங்கள் | | | |
| உள்ளூராட்சி ஓய்வூதிய சம்பளக் கட்டளை 36 ஆம் பிரிவு | மாதாந்தம் ஓய்வூதிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தாமையின் காரணமாக ரூபா 9.2 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது. | ஓய்வூதிய திணைக்களத்திலிருந்து தகவல்கள் கிடைக்காமையின் காரணமாக 2020 யூலை 09 ஆம் திகதிய சபைத் தீர்மானித்தின் பிரகாரம் 2020 சனவரி மாதம் முதல் இதுவரை உரிய மாதாந்த பட்டியல்கள் செலுத்தப்படுவதுடன் மிகுதி தகவல்கள் கிடைத்தவுடன் நிலுவைத் தொகையைத் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஓய்வூதிய கட்டளை மற்றும் வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 42,498,401 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 49,142,527 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| i. | ஆதன வரியும் வரியும் | 24,325 | 24,546 | 26,589 | 50,082 | 23,782 | 23,624 | 11,866 | 52,125 |
| ii. | வாடகை | 52,587 | 58,403 | 53,868 | 52,121 | 43,837 | 50,073 | 29,882 | 47,586 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,820 | 1,493 | 1,493 | - | 395 | 315 | 315 | - |
| iv. | ஏனைய வருமானம் | 15,572 | 5,379 | 5,379 | - | 16,553 | 24,740 | 24,403 | - |
| | மொத்தம் | 95,304 | 89,821 | 87,329 | 102,203 | 84,567 | 98,752 | 66,466 | 99,711 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | 2025 மே 15 இல் உள்ளவாறு ஆதனவரி நிலுவை ரூபா 43,824,448 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 4,471,140 தொகையும், 01 வருடத்திற்கு மேற்பட்ட 03 வருடங்களுக்கு குறைந்த ரூபா 23,339,204 தொகையும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 16,014,102 தொகையும் நிலுவை மீதியாகும். அந்த மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணிசமான நிலுவை காணப்படுகின்ற ஆதனங்களை இனங்கண்டு அந்த ஆதன உரிமையாளர்களுக்கு முதலாவது கடிதம் மூலம் அறிவித்து சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்படுகின்றது. | நிலுவை வருமானங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | 2025 மே 15 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை மற்றும் வாடகை மீதி ரூபா 47,354,915 ஆக இருந்ததுடன் இந்த நிலுவையில் 01 வருடத்திற்குக் குறைந்த ரூபா 3,374,988 தொகையும், 01 வருடத்திற்கு மேற்பட்ட 03 வருடங்களுக்கு குறைந்த ரூபா 13,064,755 தொகையும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 30,915,176 தொகையும் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வாடகை மீதியில் 59 சதவீதம் அளவில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை மீதியாக இருந்ததுடன் நிலுவை வாடகையை அறவிடுதல் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | புதிய சந்தைத் தொகுதியின் கட்டிடத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக ரூபா 4,699,624 நிலுவைத் தொகையைப் பதிவழிப்பதற்காக ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை சிற்றையிடப்பட்ட 39 கடைகளுக்கு உரிய கடை வாடகை மற்றும் நில வாடகைக்கு இடையிலான வேறுபாடுகள் உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனை மற்றும் பரிந்துரையின் பிரகாரம் பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் நகர சபை உத்தியோகத்தர் குழாத்தினால் வாடகையாளர்களுக்கு அறிவித்து நிலுவையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2019 சனவரி 10 ஆம் திகதிய இலக்கம் 2019/02 என்ற | கடைகளின் உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்காக வாடகையாளர்களுக்கு | விரைவாக உடன்படிக்கையை நாளதுவரையாக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்த 12 கடைகளுக்காக புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | கடிதம் மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது. | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது சபையினால் நிருவகின்ற சர்லி கொரயா மண்டபம் சிகிச்சை நடவடிக்கைகளுக்காக மாதாந்த வாடகை அறவிடும் அடிப்படையில் சிலாபம் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தது. முறையான உடன்படிக்கையின்றி இந்த மண்டபம் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக நடைபெற்ற கலந்துரையாடல்களின் இணக்கத்தின் பிரகாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுகாதார பணிப்பாளரின் கோரிக்கைக் கடிதத்தின் பிரகாரம் சர்லி கொரயா மண்டபம் மற்றும் உள்ளக விளையாட்டரங்கு என்பன 2025 ஏப்ரல் முதல் எதிர்வரும் 03 வருட காலத்திற்காக வாடகைக்கு வழங்குவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதுடன் அந்த பரிந்துரையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. | முறையான உடன்படிக்கையின் கீழ் வைத்தியசாலைக்கு வழங்கி வாடகை அறவிடல் வேண்டும். |
| (இ) | நகர சபையினால் கொவிட் சிகிச்சை நிலையமொன்றுக்காக சிலச் மெரியன்ஸ் உள்ளக விளையாட்டரங்கு கட்டிடம் சிலாபம் வைத்தியசாலைக்கு வழங்கி 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன் அந்தக் கட்டிடம் வழங்குதல் தொடர்பாக வைத்தியசாலையுடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. தற்போது கொவிட் தொற்றுநோய் நிலைமை முடிவடைந்திருந்த போதிலும் கட்டிடத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக நடை பெற்ற கலந்துரையாடல்களின் இணக்கத்தின் பிரகாரம் சுகாதார சேவைப் பணிப்பாளரினதும் வைத்திய சாலைப் பணிப்பாளரினதும் கோரிக்கைக் கடிதத்தின் பிரகாரம் உள்ளக விளையாட்டரங்கு 2025 ஏப்ரல் முதல் எதிர்வரும் 03 வருட காலத்திற்காக வாடகைக்கு வழங்குவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதுடன் அந்தப் பரிந்துரையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளது. | உள்ளக விளையாட் டரங்கை மீண்டும் கைப்பற்றி உரிய பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நகர சபைக்குரிய சிலாபம் எரிபொருள் நிரப்பும் நிலையம் அமைந்துள்ள காணி உடன்படிக்கையின் கீழ் 2004 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த | எரிபொருள் நிரப்பும் நிலையம் அமைந்துள்ள காணியின் உரித்தை மீண்டும் சிலாபம் நகர | காணியின் உரித்து தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளை |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் வாடகையாளரால் 2013 ஆம் ஆண்டு முதல் வாடகைப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4,874,232 நிலுவை வாடகைத் தொகையை அறவிட வேண்டியிருந்தது. | சபைக்கு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளுக்காக உள்ளுராட்சி நிறுவனத்தின் சட்டப் பிரிவிற்கு அனுப்பப் பட்டுள்ளமையால் அந்தப் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவாக தீர்வு கண்டு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,842,210 செலவில் 21 வளிப்பதனாக்கி இயந்திரங்கள் பெறப்பட்டிருந்ததுடன் அவற்றை செயற்படுத்துவதற்காக காணப்படுகின்ற மின்சார இயலளவு போதியளவில் இல்லாமையின் காரணமாக 16 இயந்திரங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த இயந்திரங்கள் யாவும் ஒரே தடவையில் செயற்படுத்துவதற்கு போதியளவான மின்சார இயலளவு காணப் படாமையினால் மாகாண சபை மின்சாரப் பொறியியலாளரின் ஆலோசனையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட் டுள்ளது. | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | நூலக தன்னியக்க செயற்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் மாகாண சபை, உள்ளுராட்ச்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த மென்பொருள் 2021 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்டது. | இது தொடர்பாக கண்டறிதல் மற்றும் மீண்டும் செயற்படுத்துதல் தொடர்பாக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் இந்த செயற்திட்டத்தை எதிர் காலத்தில் அமுல்படுத்துதல் தொடர்பாக அந்தக் குழுவினால் வழங்கப்படுகின்ற தீர்மானங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். | மென்பொருளை செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய 03 கணக்குகளின் பெறுமதி ரூபா 39,600,869 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்களை விஞ்சிய மீதிகளின் பெறுமதி ரூபா 11,822,252 ஆகும். இந்த செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தவேண்டிய மீதிகளை செலுத்துவதற்கு தேவையான பிரகாரம் விடயப் பொறுப்பு உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முன்கொண்டு செல்லப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பைக் கண்டறிந்து தீர்த்து வைத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பராமரிக்கப்படுகின்ற மற்றும் நிருவகிக்கப்படுகின்ற காணிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் மயான நிலங்கள் போன்ற 39 விடயங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 39 காணிகளுக்குரிய கையளித்தல் கட்டளையை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக கோரப்பட்டுள்ளது. சிலாபம் பிரதேச செயலகத்தால் அதில் 19 காணிகளின் உரித்து தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை | சபைக்குரிய சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அனுப்பப்பட்டுள்ளது. 09 காணிகளுக்குரிய கையளித்தல் கட்டளையை பெற்றுக் கொள்வதற்கு அளவிடல் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நகர சபைக்குரிய சிலாபம் குருணாகல் பிரதான வீதிக்கு முன்னால் அமைந்துள்ள வணிகப் பெறுமதியுடைய 160 பேர்ச் நிலப் பகுதியில் ஆலயம் ஒன்று, அதற்கான வாகனத் தரிப்பிடங்கள் 03 மற்றும் அரைவாசி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமொன்று அனுமதியற்ற வகையில் பேணிச்செல்லப்பட்டிருந்தது. | நிர்மாணங்களை அகற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அனுமதியற்ற நிர்மாணங்களை நிறுத்துமாறு சிலாபம் பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. | சபை ஆதனங்களை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு மூன்றாம் தரத்தில் 01 பதவியும், இரண்டாம் தரத்தில் 42 பதவிகளும் மற்றும் ஆரம்ப தரத்தில் 69 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக அவ்வப்போது கோரிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் நிறுத்தப்பட்டிருந்தது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையினை உரிய பிரகாரம் இனங்காணாமல் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் திட்டமிடப்பட்ட பிரகாரம் பாதீட்டுப் பணிகள் நிறைவேற்றாமையின் காரணமாக 67 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 8,106,000 ஆன நிதி எற்பாட்டுத் தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | நகர சபையினால் செயற்திட்ட பாதீடொன்று தயாரிக்கப்படுகின்ற மையால் ஒவ்வொரு செயற்திட்டத்தின் செலவினத் தலைப்புக்களுக்காகவும் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டிற்கான தேவையினை சரியான பிரகாரம் இனங்காண்டு மதிப்பீடு தயாரித்தல் மற்றும் திட்டமிடப்பட்ட பிரகாரம் பாதீட்டுப் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையின் முன்னுரிமையாகக் கொண்டு அதன் பிரகாரம் நிதி ஏற்பாடுகளை ஒதுக்கி செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபைக்குச் சொந்தமான கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையமொன்று காணப்படா திருந்ததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் தனியார் தென்னந் தோட்டக் காணியில் அகற்றப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | கழிவுப் பொருள் முகாமைத்துவத் திற்குரிய கூட்டுப்பசளை தளமொன்றை நிர்மாணிப்பதற்காக சபைக்கு சொந்தமாக போதியளவான காணி காணப்படாதிருந்ததுடன் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்குரிய காணியொன்றை பெற்றுக்கொள்வதற்காக இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கிடைக்கின்ற நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் அந்தக் காணியில் கூட்டுப்பசளைத் தளமொன்றை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை முறைமைப்படுத்துதல் வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் 12 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டு அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான 76 செயற்பாடுகள் 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அந்த செயற்பாடுகளில் 32 நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக காணப்பட்ட மழை வீழ்ச்சி காரணமாக இருந்ததுடன் 2025 ஆம் ஆண்டின் போது சகல நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து பொது மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |